**தலைப்பு 317 – வட மத்திய மாகாண சபை - 2025**

-------------------------------------------------------------------------------

## 01. தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் செயற்பணி

### 1.1 தூரநோக்கு

அபிவிருத்தியின் நலன்களை நன்றாக அனுபவித்த பெருமைமிகு மக்களிடமிருந்து வளமான மாகாணமொன்றை நாட்டிற்கு வழங்குதல்.

### 1.2 பணிக்கூற்று

அனைத்து தரப்பினரினதும் நல்ல பங்கேற்புடன், மாகாணத்தில் காணப்படுகின்ற சகல வளங்கள் மற்றும் சாத்தியக்கூறுகளை உச்ச அளவில் பயன்படுத்தி, மாகாணத்தில் மனித வள மேம்பாட்டிற்கு முன்னுரிமை அளிக்கும் பொருளாதார அபிவிருத்தி பிரவேசத்தில் வெளிப்படையாக மாகாணத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு நேரடியாகவும், தொடர்ச்சியாகவும் பங்களித்தல்.

### 1.3 செயற்பணி

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 13 ஆவது அரசியலமைப்பு திருத்தம் மற்றும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பணிகள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றுதல்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### (ஆ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்

2025 ஆம் ஆண்டின் போது வட மத்திய மாகாண சபைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 45,485.42 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் அதில் ரூபா 41,961.68 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மாகாண சபைக்கு வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாட்டில் சேமிக்கப்பட்ட தொகை ரூபா 3,523.74 மில்லியனாக இருந்ததடன் அது மொத்த தேறிய நிதியேற்பாட்டில் 7.75 சதவீதம் ஆகும். விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2025.12.31 இல் உள்ளவாறு | | | சேமிப்பு தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | % |
| மீண்டெழுபவை | 36,489 .00 | 35,201.16 | 1,287.84 | 3.53 |
| மூலதனம் | 8,996.42 | 6,760.52 | 2,235.90 | 24.85 |
| **மொத்தம்** | 45,485.42 | 41,961.68 | 3,523.74 | 7.75 |

**03. கணக்காய்வு அவதானிப்புக்கள்**

(அ) செலவின விடய இலக்கம் 1507 செயற்பாட்டு மற்றும் பராமரிப்புச் செலவுகளில் ரூபாய் 1,125 மில்லியன் சேமிப்பாக இருந்த நிலையில், சம்பளம் மற்றும் ஊதியங்களுக்காக ரூபாய் 2,000 மில்லியன் மேலதிக மதிப்பீடாக ஒதுக்கப்பட்டிருந்தது.

(ஆ) செலவின விடய இலக்கம் 2203 மாகாண சபைகளுக்கான நிதிஏற்பாட்டின் கீழ் மாகாண குறித்துரைத்த அபிவிருத்தி மானியங்களுக்காக வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டுத் தொகை பிரதான பேரேட்டின் படி ரூபா 678.6 மில்லியன் ஆக இருந்த போதும் கட்டுநிதி விடுவித்தல் பதிவேட்டின் படி வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டுத் தொகை ரூபா 545 மில்லியன் ஆனமையால் ரூபா 133.6 மில்லியன் வேறுபாடு அவவனிக்கப்பட்டது.

(இ) 317 தலைப்பின் கீழ் பாராளுமன்றத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட கட்டுநிதிகள் மாகாண சபையினால் மாகாண சபை நிதியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தது. மாகாண சபை நிதியம் கணக்காய்வு செய்யப்பட்டு அது தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.